**கவனிக்க.**- *2006.05.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1447 - 2006 මැයි 26 වැනි සිකුරාදා - 2006.05.26**

*1447 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 316 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 317 |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 318 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூன் 2 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, மே 19 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 97

இல. : டீ/22/என்வை/357

## இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை

நிரந்தரக் கடற்படை உப சேவைக்கு மாற்றம் செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து இலங்கை கடற்படையின் நிரந்தரப் படையணியிலிருந்து நிரந்தரக் கடற்படை உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கொமாண்டர் (மாலிமா) மல்நைதெலாகே ரஞ்சித் பிரனாந்து, ஆர்எஸ்பீ, இகப, என்ஆர்எக்ச் 0464

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, மாச்சு 15.

5-406

---

2006 இன் இல. 98

இல. : டீஆர்எவ்/624/என்வை/01/03

## இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல்

2005, திசெம்பர் மாதம் 26 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (பொ) ஆக :-

லெப்டினன்ட் (பொ) தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (பொ) மஹேஷ் தனன்ஜய கொகுனுவத்தகே, இகப, என்ஆர்ஈ 0855

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, பெப்புருவரி 10.

5-402

---

2006 இன் இல. 99

இல. : டீ/ஆர்எவ்/824/என்வை/01/03

## இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியில் நிரந்தரமாக்குதல்

2000, யூன் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (மாலிமா) ஆக :-

லெப்டினன்ட் (தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (மாலிமா) ) றொஹான் நலீன் தேவேந்திர, இகப, என்ஆர்எக்ச் 0422

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, பெப்புருவரி 14.

5-403

---

2006 இன் இல. 100

டீஆர்எவ்/824/என்வை/01/05

## இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

2006, சனவரி மாதம் 27 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் ஆக :-

லெப்டினன்ட் திசாநாயக்க முதியன்சேலாகே நலின் பிரசாத் திசாநாயக்க, இகப, என்ஆர்எக்ச் 0879

2006, சனவரி மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (மி) ஆக :-

லெப்டினன்ட் (மி) மஞ்சு சமிர ஜயசேக்கர, இகப, என்ஆர்எல் 0868

2. மேற்குறிப்பிட்ட பதவியுயர்வு பரிசோதனை அடிப்படையில் ஆவதுடன் உயர்த்தப்பட்ட பதவியினை ஏற்பதற்குத் தகுதியற்றவரெனத் தெரிந்துபோனால் உத்தியோகத்தர்களினது பதவியுயர்வினை இரத்துச் செய்து மீண்டும் முன்னரிருந்த பதவிக்கு நிமனஞ் செய்யப்படுவார்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, மாச்சு 8.

5-404

*2006 இன் இல. 101*

*இல. : டீ/22/என்வை/371.*

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல், நிரந்தரக் கடற்படை உப சேவைக்கு மாற்றம் செய்தல்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, மாச்சு மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கைக் கடற்படையின் நிரந்தரப் பலப் படையிலிருந்து இளைப்பாறுதலும், அன்றிலிருந்து நிரந்தரக் கடற்படை உப சேவைக்கு மாற்றம் செய்தலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*லெப்டினன்ட் (வாக) தேவதாகே லலித் அசோக்க குமார ஜயசேக்கர, இகப, என்ஆர்டப் 0978*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும், ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2006, பெப்புருவரி 14.*

*5-405*

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய பொங்கல் உற்சவம் - 2005**

*மேற்படி பொங்கல் உற்சவம் 2006 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி முற்பகல் 6.00 மணிக்கு ஆரம்பமாகி 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முடிவடையும் என்பது பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது.*

*2. 1949.05.27 ஆந் திகதிய 9978 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 1950.05.26 ஆந் திகதிய 10105 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.*

*3. மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்சவத்தின் போது அமுல்படுத்தப்படும்.*

*இமெல்டா சுகுமார்,*
*அரசாங்க அதிபர்,*
*முல்லைத்தீவு மாவட்டம்,*

*2006.05.03.*

*5-398*

---

**1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

*பிரிவு 3 (2) இன் கீழான விலைக்களிப்புக்கான பணிப்பு*

*1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வியாபார, வர்த்தக, பாவனையாளர் விவகாரங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே ஆகிய நான், நிதியமைச்சரின் ஒருப்பாட்டுடன், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும், விலக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ளதுமான பின்வரும் கம்பனியைச் சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கின்ற பணிப்பொன்றை இத்தால் வழங்குகின்றேன்.*

*ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே,*
*வியாபார, வர்த்தக, பாவனையாளர் விவகாரங்கள் மற்றும் சந்தைப்படுத்தல்*
*அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றத்தின் பிரதான அரசாங்கக் கொறடாவும்.*

*கொழும்பு,*
*2006, ஏப்பிறல் 28.*

**அட்டவணை**

*ஐசிசி வங்கி லிமிட்டெட்*

*5-335*

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## தேசிய சேமிப்பு வங்கி

*1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச், சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்கள்அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் 2005.09.05ஆந் திகதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

கடன் இல. : 17555/15.

"திரு. டி. ஜி. ஹேமப்பால பொல்வத்தே - கேவத்த கொக்மடுவ வெலிகம (முன்னர் இல. 2/ 19 1 ஆவது ஒழுங்கை கவிராஜா மாவத்தை, வேகட பாணந்துறையைச் சேர்ந்த திரு. கங்காபட ஹெட்டி ஆராய்ச்சிகே கிரிசாந்த சுஜீவா என்பவரை ஈடுவைத்துள்ளவராகக் கொண்டு, தேசிய சேமிப்பு வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு யஸ்மின் எப். டீன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 1998.01.16 ஆந் திகதிய 2067 ஆம் இலக்க, ஈட்டுமுறியின் மீது 2005.09.18 ஆந் திகதியன்றுள்ள வாறாக, இரண்டு இலட்சத்து எண்பத்து ஒன்பதினாயிரத்து இருநூற்று இருபத்தி ஏழு ரூபா (ரூ. 2,89,227) ஐக் கொண்ட தொகை இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கிக்கு வருமதியாகவும், சேருமதியாகவும் இருக்கின்றதாதலால், சொல்லப்பட்ட 2067 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும், வளவுகளும், சொல்லப்பட்ட 1995 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அறவிடற்பாலனவான விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், ஏனைய இறுப்பனவுகள் மற்றும் பணங்கள் என்பவற்றுடன் சேர்த்து, சொல்லப்பட்ட ரூபா 2,89,227 ஐக் கொண்ட தொகையை 2005.09.18 ஆந் திகதி தொடக்கம் விற்பனை திகதி வரை ஆண்டு ஒன்றுக்கு (15% இலும்) வட்டியுடன் அறவிடுதவற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் பகிரங்க ஏலமுலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனையின் பாணந்துறை தல்பிட்டி டெபடவின் பாணந்துறை பிரதேச சபை, சுதந்திரமுள்ள உப கந்தோர் எல்லைக்குட்பட்ட கல்டியுட், ஹரின கிராமங்களில் அமைந்துள்ள ரத்னகிரிய தோட்டமும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அதில் நிற்கும் அனைத்தும் உள்ளடங்கலாகவும் பி. எல். டி. பர்னான்டோவினால் ஆக்கப்பட்ட 1991, ஓகத்து 08 ஆந் திகதியிட்ட 3518 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 'எச்' என அடையாளமிடப்பட்டதும் வடக்கில்: துண்டு 'எச்' என அடையாளமிடப்பட்டதும் - வடக்கில்: துண்டு 'ஜீ' யையும்; கிழக்கில்: 3448 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 4ஜயும் ; தெற்கில் : 448 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு பி (பாதையுரித்து) யையும்; மேற்கில்: துண்டு 1 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட 3518 ஆம் வரைபடத்திற்கமைய விஸ்தீரணத்தில் பதினான்கு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.14பே.) கொண்டதும் பாணந்துறை காணிப்பதிவகத்தில் எப்125/ 287 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான துண்டு 'எச்' என்னும் பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

சொல்லப்பட்ட 3518 ஆம்இலக்க வரைபடத்தின் துண்டு 1எனஅடையாளமிடப்பட்ட பாதை ஒதுக்கு மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சி. டபிள்யு.டி. நீஸ் இனால் ஆக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டு திசெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து 29 ஆந் திகதியிட்ட 448 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் ஏ. பி. என்பவற்றின் மேலாகவும் ஊடாகவும் செல்வதற்கான பாதையுரித்தும் உள்ளடங்கலாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

முகாமையாளர்-கடன்.

தேசிய சேமிப்பு வங்கி,
255, காலி வீதி,
கொழும்பு 03.

5-368

---

## மக்கள் வங்கி - களனி கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கி பணிப்பாளர் சபையினால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் 2006.01.19 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

"கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. எல். விஜேசிறிவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998.12.14 ஆந் திகதி கொண்ட இல. 3661 ஈட்டுமுறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில், வல்பொல கங்கானம்லாகே அமித் பெரேரா சேனாதீர கங்காணி யசரங்சி திலகவர்தன மற்றும் சேனாதீர சரச வன்திம மிகார திலகவர்தன என்பவர்கள் தவணை தவறியுள்ளமையினாலும் குறிப்பிட்ட ஈட்டு முறிகளின் கீழ் தற்போது பத்து இலட்சத்து இருபத்தி ஏழாயிரம் ரூபா (ரூ. 10,27,000) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக சேர வேண்டியுள்ளது. மேலும் பத்து இலட்சத்து இருபத்தி ஏழாயிரம் ரூபா (ரூ. 10,27,000) பணத்தொகைக்காக 2002.03.30 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் வரை வருடாந்தம் 18% வட்டியையும் மேலும் குறிப்பிட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வட்டியும் கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள்

பெறப்பட்டிருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட பத்து இலட்சத்து இருபத்தி ஏழாயிரம் ரூபா (ரூ. 10,27,000) பணத்தொகையை அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். இராமநாயக்க அவர்களால் குறிப்பிட்ட இல. 3661 ஈட்டு முறியின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு, எஸ். பி. எல். விஜேசிறிவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.09.24 ஆந் திகதி கொண்ட இல. 7367 மற்றும் 2003.03.03 ஆந் திகதி கொண்ட 7833 ஆம் இலக்கமுடைய விடுதலை முறியின் கீழ் விடுவிக்கப்பட்ட பகுதிகள் தவிர்ந்த மீதமுள்ள கீழே குறிப்பிட்டுள்ள ஆதனமும் வளவும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கி பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப் பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஆதனங்களின் விவரணம்

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளை, பல்லேபத்துவில், நவகமுவ எனும் இடத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்த அல்லது முஹந்திரம்கேவத்த, நெகதிகேவத்த அல்லது புளுகஹவத்த என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. டீ. ஜே. பெரேரா அவர்களால் 2002.11.16 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 5404 வரைபடத்தின் 'Q' காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கில் : பாதையும் : கிழக்கில் : லொட் பி மற்றும் ஆர் உம் ; தெற்கில் : இல. 1203 வரைபடத்தின் லொட் 13 உம் ; மேற்கில் : இல. 1203 வரைபடத்தின் லொட் 4உம் பாதையும் எல்லைகளாக அமைந்த பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டட பொருட்கள் சகலதுமாகும்.

2. மேலே குறிப்பிட்ட நவகமுவ எனும் இடத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்த அல்லது முஹந்திரம்கேவத்த, நெகதிகேவத்த அல்லது புளுகஹவத்த என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. டீ. ஜே. பெரேரா அவர்களால் 2002.11.16 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 5404 வரைபடத்தின் லொட் 'P' காணித்துண்டின் லொட் இல. 03 எனும் பகுதியின் எல்லைகளாக - வடக்கில் : பாதையும் : கிழக்கில் : பாதையும் ; தெற்கில் : லொட் 'R' உம் ; மேற்கில் : லொட் 'Q' ஆகியன எல்லைகளாக அமைந்த பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டட பொருட்கள் சகலதுமாகும்.

மேலே குறிப்பிட்ட காணித்துண்டுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியிலிருந்து பிரித்து ஒதுக்கப்பட்ட பகுதிகளாகும் :-

(அ) கடுவல பிரதேச சபை எல்லைக்குள் மேலே குறிப்பிட்ட நவகமுவ எனும் இடத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்தத அல்லது முஹந்திரம்வத்த, நெகதிகேவத்த அல்லது புளுகஹவத்த (வரைபடத்தின் பிரகாரம் எடம்பகஹவத்த, கோன்கஹவத்த மற்றும் நெகதிகேவத்த) என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. விஜேசிங்க அவர்களால் 1997.10.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1126 வரைபடத்தின் லொட் இல. 01 காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கில் : வரைபட இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் இல. 5 உம் : கிழக்கில் : வரைபட இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் இல. 7 உம் ; தெற்கில் : லொட் இல. 02 உம் ; மேற்கில் : வரைபட இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் இல. 05 ஆகியன எல்லைகளாக அமைந்த இருபது தசம் இரண்டு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20.20பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டட பொருட்கள் சகலதுமாகும்.

இந்தக் காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் 'ஜீ' 1067/248 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கடுவல பிரதேச சபை எல்லைக்குள் மேலே குறிப்பிட்ட நவகமுவ எனும் இடத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்த அல்லது முஹந்திரம்வத்த, நெகதிகேவத்த அல்லது புளுகஹவத்த (வரைபடத்தின் பிரகாரம் எடம்பகஹவத்த, கோன்கஹவத்த மற்றும் நெகதிகேவத்த) என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. விஜேசிங்க அவர்களால் 1997.10.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1126 வரைபடத்தின் லொட் இல. 02 காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கில் : லொட் இல. 1 உம் : கிழக்கில் : வரைபட இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் 07 உம் ; தெற்கில் : வரைவு இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் இல. 13 உம் ; மேற்கில் : வரைபட இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் இல. 04 மற்றும் 5 ஆகியன எல்லைகளாக அமைந்த பதினேழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 17பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டட பொருட்கள் சகலதுமாகும்.

இந்தக் காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் 'ஜீ' 1067/249 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேலே குறிப்பிட்ட நவகமுவ எனும் இடத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்த அல்லது முஹந்திரம்வத்த, நெகதிகேவத்த அல்லது புளுகஹவத்த என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. டீ. ஜே. பெரேரா அவர்களால் 2005.01.05 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 5666 வரைபடத்தின் பிரகாரம் எல்லைகளாக - வடக்கில் : பாதையும் : கிழக்கில் : வரைபட இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் 09 மற்றும் இல. 03 இல் ஒரு பகுதியும் ; தெற்கில்: வரைபட இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் இல. 09 மற்றும் இல. 11 உம் ; மேற்கில் : பாதை ஆகியன எல்லைகளாக அமைந்த ஒரு றூட் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 3பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டட பொருட்கள் சகலதுமாகும்.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியிலிருந்து பிரித்து ஒதுக்கப்பட்ட பகுதிகளாகும் :-

(இ) மேற்குறிப்பிட்ட கடுவல பிரதேச சபை எல்லைக்குள் நவகமுவ எனும் இடத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்த அல்லது முஹந்திரம்வத்த, நெகதிகேவத்த அல்லது புளுகஹவத்த (வரைபடத்தின் பிரகாரம் எடம்பகஹவத்த, கோன்கஹவத்த மற்றும் நெகதிகேவத்த) என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. விஜேசிங்க அவர்களால் 1997.10.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1126 வரைபடத்தின் லொட் இல. 03 காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கில் : வரைபட இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் 7 உம் : கிழக்கில் : கெகிரிகல பாதையும் ; தெற்கில் : லொட் இல. 10,9,11 உம் ; மேற்கில் : வரைபட இல. 1203 இல் குறிப்பிட்ட லொட் இல. 07 ஆகியன எல்லைகளாக அமைந்த ஒரு றூட் இருபத்திமூன்று தசம் எட்டு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 23.80பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டட பொருட்கள் சகலதுமாகும்.

இந்தக் காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் 'ஜீ' 1067/250 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஏ. ஜயரத்ன அவர்களால் 1994.10.12 மற்றும் 1996.03.11 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல 1203 வரைபடத்தில் கூறப்பட்டுள்ள லொட் இல. 07 இல் பாதை உரித்தும் உள்ளடங்கும்.

இந்தக் காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் 'ஜீ' 1067/260 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
மேற்கு 111 வலய காரியாலயம்,
131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொட.

5-387

---

**மக்கள் வங்கி-கண்டி கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2005.10.26 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கண்டி பிரசித்த நொத்தாரிஸ் திருமதி அஜந்தா குமாரிஹாமி விஜேரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2004.02.19 ஆந் திகதிய 4105 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின் பிரகாரம் அத்துல குமார பண்டார தொடன்வெல உம், நயனலதா மல்காந்தி அபேசிறிவர்தன செனரத் யாப்பா ஆகியவர்கள் ஈட்டு முறியில் தவணை தவறியுள்ளதால், கூறப்பட்டட ஈட்டு முறியின்கீழ் தற்போது ஏழு இலட்சம் ரூபா (ரூ. 7,00,000) தொகைப் பணமும் II ஆறு இலட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்றி இருபத்தாறு ரூபா முப்பது சதம் (ரூ. 6,18,226.30) ஆன தொகைப் பணம் மக்கள் வங்கிக்கு அறவீடு செய்து கொள்ள வேண்டியுள்ளதால், 2004.03.01 ஆந் திகதி தொடக்கம் வருடாந்தம் 19.25% வீதம் ஏழு இலட்சம் ரூபா (ரூபா 7,00,000) தொகைப் பணமும்.

(ii) 2005.06.09 ஆந் திகதி தொடக்கம் வருடாந்தம் 18.25% வீதம் ஆறு இலட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்றி இருபத்தாறு ரூபா முப்பது சதமும் (ரூ 6,18,226.30) ஆன தொகைப் பணத்திற்காக ஏலவிற்பனைத் தினம்வரை மேலும் வட்டியும் அதற்குரிய மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) பிரிவின்கீழ் அறவீடு செய்துகொள்ள வேண்டிய கட்டணமும், பின்பு எவையேனும் கொடுப்பனவுகள் பெற்றிருப்பின் அதைக் கழித்து கூறப்பட்ட ஏழு இலட்சம் ரூபா (ரூ. 7,00,000) தொகையும்,

(iii) ஆறு இலட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்றி இருபத்தாறு ரூபா முப்பது சதமும் (ரூ 6,18,226.30) ஆன தொகைப் பணத்தை அறவீடு செய்து கொள்வதற்காக கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஷொக்மன் உம் சமரவிக்ரம அவர்களால் 4105 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின்கீழ் கூறப்பட்ட வங்கிக்கு அடகு வைத்திருக்கும் ஆதனமும் நிலமும் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தமக்குறித்தாக்கட்ட தத்துவங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், யட்டிநுவர கங்கவட்ட கோரளே அல்லது தற்போது கண்டி மாநகர சபை எல்லைகளுக்குள் கட்டுகெலே தற்போது பஹிரவகந்த பாதையில் அமைந்துள்ள டவுன் வீவ் தற்போது சாந்த ஜோசப் ஹில் என்றழைக்கப்படும் காணியை 1962 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி அளவையாளரான கே. ஜீ. ஹேரத் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1270 ஆம் இலக்கங்கொண்ட மூல வரைபு படத்தின் பிரகாரம் பிரிக்கப்பட்ட 3 ஆம் இலக்கம் கொண்ட பகுதியாகிய இருபத்தி நான்கு பர்ச்சஸ் தசம் ஐந்து (0ஏ. 0றூ. 24.5பே.) விசாலமுள்ள காணி வடக்கில் : 2 ஆம் இலக்கங்கொண்ட காணித்துண்டும் ; கிழக்கில் : நகரசபைக் காணியும் ; தெற்கில் : 3 பி இலக்கங்கொண்ட காணித்துண்டும் ; மேற்கில் : பஹிரவகந்த பாதையும் ஆகிய எல்லைகளில் அமைந்துள்ள கட்டிடங்களும் மரங்கள், இலைகள், பழங்கள் ஆகிய சகலவைகளும் உட்படும். இக்காணி கண்டி காணி பதிவு செய்யும் அலுவலகத்தில் A 128/259 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்,
மத்திய வலயம்.

மக்கள் வங்கி,
மத்திய வலய அலுவலகம்,
இல. 17, தலதா வீதி,
கண்டி.

5-388

---

**மக்கள் வங்கி-கண்டி கிளை**

1986 ம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் 29 ம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டீ பிரிவின் கீழ் தீர்மானங்கள்

1986ஆம் ஆண்டின் 32ம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961ம் 29ம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டீ (29D) பிரிவின் கீழ் மக்கள் வங்கி பணிப்பாளர் சபையால் 2005.10.26 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தின் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"I. கண்டி பிரசித்த நொத்தாரிசு திருமதி அஜந்தா குமாரிஹாமி விஜேரத்ன அவர்களால், அத்தாட்சிப்படுத்திய 2000.03.08 ஆந்

திகதிய 2481 ம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின் பிரகாரம் –(1) பூஜித்த கித்சிறி கமகே, (2) பாலித்த பத்மசிறி கமகெ, (3) பியல் பிரேமசிறி கமகெ, (4) லலித் பியசிறி கமகெ (5) பிரேமாவதி கொடிகார ஆகியவர்கள் ஈட்டு முறியில் தவணை தவறியுள்ளதால் கூறப்பட்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது இருபத்தைந்து இலட்சத்து எழுபதாயிரத்து தொளாயிரத்து நாற்பத்தாறு ரூபாயும் அறுபத்தாறு சதமும் ஆன பணத்தொகையும் (ரூபா 25,70,946.66) ஆன தொகைப்பணமும், (ii) பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூராயிரம் (ரூபா 12,90,000) தொகைப்பணமும், (iii) தொண்ணூற்றி இரண்டாயிரத்து முன்னூற்றி ஐம்பத்தேழு ரூபாயும், எண்பத்தி இரண்டு சதமும் (ரூபா 92,357.82) ஆன தொகைப்பணம் மக்கள் வங்கிக்கு அறவீடு செய்து கொள்ள வேண்டியுள்ளதால், 2003.07.14 ஆந் திகதி தொடக்கம் வருடாந்தம் 22% இருபத்தைந்து இலட்சத்து எழுபதாயிரத்து தொளாயிரத்து நாற்பத்தாறு ரூபாயும் அறுபத்தாறு சதமும் (ரூபா 25,70,946.66) ஆன தொகைப் பணத்திற்காக

II. 2003.07.14 ஆந் திகதி தொடக்கம் வருடாந்தம் 22% பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூராயிரம் (ரூபா 12, 90,000) தொகைப்பணத்திற்காகவும்,

III. 2005.09.10 ஆந் திகதி தொடக்கம் வருடாந்தம் 26.5% வீதம் தொண்ணூற்றி இரண்டாயிரத்து முன்னூற்றி ஐம்பத்தேழு ரூபாயும், எண்பத்தி இரண்டு சதமும் (ரூபா 92,357.82) ஆன தொகைப் பணத்திற்காக ஏலவிற்பனை தினம் வரை மேலும் வட்டியும், அதற்குரிய மக்கள் வங்கி சட்டத்தின் 29எல் (29L) பிரிவின் கீழ் அறவீடு செய்து கொள்ள வேண்டிய பணமும் கட்டணமும் உட்பட மீண்டும் எவையேனும் கொடுப்பனவுகள் பெற்றிருப்பின் அதைக் கழித்து கூறப்பட்ட இருபத்தைந்து இலட்சத்து எழுபதாயிரத்து தொளாயிரத்து நாற்பத்தாறு ரூபாயும் அறுபத்தாறு சதமும் (ரூபா 25,70,946.66) ஆன தொகைப் பணமும்.

II. பண்ணிரண்டு இலட்சத்து தொண்ணூராயிரம் ரூபாய் (ரூபா 12,90,000) தொகைப் பணத்திற்காக, III. தொண்ணூற்றி இரண்டாயிரத்து முன்னூற்றி ஐம்பத்தேழு ரூபாயும் எண்பத்தி இரண்டு சதமும் (ரூபா 92,357.82) ஆன தொகைப் பணத்தை அறவீடு செய்து கொள்வதற்காக கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஷொக்மன் உம் சமரவிக்ரம அவர்களால் கூறப்பட்ட 2481 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டு முறியின் கீழ் கூறப்பட்ட வங்கிக்கு அடகு வைத்திருக்கும் ஆதனமும் நிலமும் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

**அடகு வைத்திருக்கும் ஆதனங்கள் பற்றிய விவரணம்**

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர கங்கவட்ட கோரளே, கண்டி மாநகர சபை எல்லைகளுக்குள் தொடம்பல கிராமத்தில் அமைந்துள்ள நியந்தகல அல்லது பொல்வத்த என்றழைக்கப்படும் காணியை உத்தரவுபெற்ற அளவையாளரான ஆர். டீ. சமரசிங்ஹ அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட மூல வரைவு படத்தின் 1ம் லொட் இலக்கமாகிய பர்ச்சஸ் தசம் ஆறு (0ஏ. 0றூ. 06பே.) விசாலமுள்ள கூறப்பட்ட மூல வரைவு படத்தின் பிரகாரம் எல்லைகள்– வடக்கு: 4434 ஆம் இலக்கங்கொண்ட மூல வரைவு படத்தின் லொட் இலக்கம் 03 ஐக் கொண்ட கூறப்பட்ட காணியின் மிகுதித் துண்டும்; கிழக்கு: பாதைக்காகப் பாதுகாக்கப்பட்ட பகுதியும்; தெற்கு: மேற்கூறப்பட்ட 691ம் இலக்கங்கொண்ட மூல வரைபடத்தின் 2 ஆம் லொட் இலக்கங்கொண்ட பகுதியும்; மேற்கில்: மேற்கூறப்பட்ட 691 ஆம் இலக்கங்கொண்ட மூல வரைவு படத்தின் 03ம் லொட் இலக்கங்கொண்ட பகுதியும், ஆகிய இவ்வாறு கூறப்பட்ட எல்லைகளில் அமைந்துள்ள பயிர்களும், கட்டிடங்களும், மரங்கள், இலைகள், பழங்கள் ஆகிய சகலவைகளும் உட்படும்.

இக்காணி கண்டி காணி பதிவு செய்யும் அலுவலகத்தில் ஏ 121/298 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட தொடன்வலயில் அமைந்துள்ள நியந்தகல அல்லது பொல்வத்த என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற அளவையாளரான ஆ. டீ. சமரசிங்ஹ அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 691 ஆம் இலக்கங்கொண்ட மூல வரைவு படத்தின் 2 ஆம் லொட் இலக்கங்கொண்ட பர்ச்சஸ் பதிநான்கு தசம் நான்கு (0ஏ. 0றூ. 14.4பே.) விசாலமுள்ள மூலவரைவு படத்தின் பிரகாரம் எல்லைகள். வடக்கு: மேற்கூறப்பட்ட 691ம் இலக்கங்கொண்ட மூல வரைவு படத்தின் 1 ஆம் இலக்கங்கொண்ட பாதை பாதுகாப்பு பகுதியும்; தெற்கு: 4434 ஆம் இலக்கங்கொண்ட மூல வரைவு படத்தின் 2உம் லொட் இலக்கமும்; மேற்கு: 3 ஆம் லொட் இலக்கங்கொண்ட பகுதியும்; கிழக்கு: பஹிரவகந்த பாதையும், பாதுகாக்கப்பட்ட பாதையும். இவ்வாறு கூறப்பட்ட எல்லைகளில் அமைந்துள்ள பயிர்களும், கட்டிடங்களும், மரங்கள், இலைகள் பழங்கள் ஆகிய சகலவைகளும் உட்படும். இக்காணி கண்டி, காணி பதிவு செய்யும் அலுவலகத்தில் A308/204 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பிரித்து ஒதுக்கப்பட்ட ஒரு பகுதியாகும்.

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர கங்கவட்ட கோரளே கண்டி நகர சபை எல்லைகளுக்குள் தொடம்வல அல்லது உடமடபொத்தவில் அமைந்துள்ள நியந்தகல அல்லது பொல்வத்த 25 ஏ வரிப்பண இலக்கங்கொண்ட பகுதியில் பஹிரவகந்தைக்குப் போகும் பாதையில் கீழ் 3 ஏக்கரும், 32 பேர்ச்சஸ் உம், (3ஏ. 0றூ. 32பே.) அறுவடையுள்ள காணிக்கு எல்லைகள்– வடக்கும் கிழக்கும்.– இக்காணியின் மிகுதித் துண்டைப் பிரிக்கும் கம்சபா பாதைகளும், தெற்கில்: சமதேரிஸ் உடைய காணியும், டி. ஜே. பெரேரா விற்கும் இன்னும் சிலருக்குரிய வயலும், மேற்கில்: லுவிஸ் பெரேராவிற்குரிய வெலிகந்தே காணியும் ஆகிய இவ்வாறு கூறப்பட்ட எல்லைகளுக்குள் அமைந்திருந்த காணியிலிருந்து வடக்கு பக்கத்தில் தொடம்வலக்குச் செல்லும் பாதையும், ரத்நாயக்கவிற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் பிரிக்கப்படாத ஒரு ஏக்கரும் (1ஏ. 0றூ. 0பே.) விசாலமுள்ள காணித்துண்டில் அமைந்துள்ள வீட்டுக்கடையும், ஏனைய கட்டிடங்களும் தவிர மிகுதி பூமியினதும் அதற்குரிய சகலவைகளின் பிரிக்கப்படாத இரண்டில் ஒரு பங்கும், பிரிக்கப்படாத பதினைந்தும் (0ஏ. 0றூ. 05பே.) அறுடையுள்ளதுமாகும்.

இக்காணி கண்டி காணி பதிவு செய்யும் அலுவலகத்தில் 114/300 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி நகர சபை எல்லைகளுக்குள் ப்ரவுன்ரிக் வீதியில் (தற்போது யட்டிநுவர வீதியில்) 68 ஆம் வரிப்பண இலக்கங் கொண்ட இரண்டு மாடி வீடு உட்பட காணியை கண்டி நீதிமன்றத்தின் 47911 இலக்க வழக்கின் இறுதித் தீர்ப்பிற்கு ஏற்ப எச். ஷொக்மன் அளவையாளர் மூலம் 1937.04.27 ஆந் திகதிய X கொண்ட மூலவரைபடத்தின் பிரகாரம் இரண்டு தசம் ஐந்து மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 2.53பே.) அறுவடைக்கு எல்லைகள்– வடக்கு : சூரிய ஆரச்சியின் தொன் சைமன் சில்வா அப்புஹாமியின் காணியும் ; கிழக்கு : யட்டிநுவர வீதியும் ; தெற்கிலும் மேற்கிலும் : அப்துல்புள்ளே சின்னத்தம்பியின் காணியும், ஆகிய எல்லைகளில் அமைந்துள்ள காணியும், அங்கே அமைந்துள்ள

பயிர்களும் கட்டிடங்களும், மரங்கள், இலைகள், பழங்கள் ஆகிய சகலவைகளும் உட்படும்.

இக்காணி கண்டி காணி பதிவு செய்யும் அலுவலகத்தில் 300/122 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்,
(மத்திய வலயம்)

மக்கள் வங்கி,
மத்திய வலய அலுவலகம்,
இல. 17, தலதா வீதி,
கண்டி.

05-389

---

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானம் 2001.01.25 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"மக்கள் வங்கியின் சார்பில் கண்டி பிரசித்த நொத்தாரிசும் சட்ட அறிவுரையாளருமான ஏ. கே. விஜேரத்ன அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 2000 ஆம் இலக்கங்கொண்ட 1999.08.24 ஆந் திகதிய ஈட்டு முறியின் பிரகாரம் 1136 ஆம் இலக்க மாத்தளை பாதை, அலவத்துகொடயில் வசிக்கும் மொஹமட் டெப் அப்துல் கரீம் ஆகியவர்கள் ஈட்டு முறியில் தவறியுள்ளதால் கூறப்பட்ட 1136 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின் கீழ் தற்போது இருபத்து மூன்று இலட்சத்து பதினாறாயிரம் ரூபா (ரூபா 23,16,000) கொண்ட தொகை மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் அறவிட்டுக்கொள்ள வேண்டியுமுள்ளதால் 2000.11.15 ஆந் திகதி தொடக்கம் ஏலவிற்பனைத் தினம் வரை வருடாந்தம் 24% வீதம் இருபத்து மூன்று இலட்சத்து பதினாறாயிரம் ரூபா (ரூபா 23,16,000) தொகை பணத்திற்காக மேலும் வட்டியும் ஏலவிற்பனைக் கட்டணமுமாக பின்பு எவையேனும் கொடுப்பனவுகள் பெற்றிருப்பின் அதைக் கழித்து இருபத்து மூன்று இலட்சத்து பதினாறாயிரம் ரூபா (ரூபா 23,16,000) பணத்தை மீண்டும் அறவிட்டுக்கொள்வதற்காக கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஷொக்மன்னும் சமரவிக்ரம கம்பனி மூலம் முற்கூறப்பட்ட 2000 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறியின் பிரகாரம் முற்கூறப்பட்ட வங்கிக்கு அடகு வைத்திக்கும் ஆதனங்களும், நிலமும் பிரசித்த ஏலவிற்பனையில் விற்பனை செய்ய வேண்டுமென 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி பிரிவின் கீழ் மக்கள் வங்கி மூலம் பெற்றுக்கொண்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் குழு இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ உட கம்பஹா கோரளையில் அலவத்துக்கொடயில் அமைந்துள்ள "சயிஸ்டன் எஸ்டேட்" என்றழைக்கப்படுவதும், கூறப்படுவதுமான காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். பானபொக்கே அவர்களால் தயாரிக்கப்பட்ட 2274 ஆம் இலக்க 1975.08.03 ஆந் திகதிய மூல வரைபடத்தின் 2 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டாக அடையாளம் காட்டப்பட்டுள்ள பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டிற்கு எல்லைகள் : வடக்கில் : ஓடையும் ; கிழக்கில் : 3 ஆம் இலக்கம் கொண்ட காணித் துண்டும் ; தெற்கில் : பிர. வெ. தெ பாதையும் ; மேற்கில் : 1 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டும் ஆகிய எல்லைகளில் மூன்று றூட் இரண்டு தசம் எட்டு பர்சஸ் (0ஏக்கர் 3 றூட் 2.8 பே.) விசாலமுள்ள அங்கு அமைந்துள்ள கட்டிடமும் பயிர்களும் அனைத்தும் உட்படும். இது கண்டி காணி பதிவு செய்யும் அலுவலகத்தில் எச் 656/03 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கண்டி.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 17, தலதா வீதி,
கண்டி.

05-390

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.